**செ. கு. எண்:102** **நாள்: 20.07.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 20.7.2017

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், இலந்தைக்குளம் தெற்கு குடியிருப்பைச் சேர்ந்த திரு தங்கராஜ் என்பவரின் மனைவி திருமதி சாந்தி என்பவர் வீடு இடிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், காசிமேடு பவர்குப்பம் பகுதியைச் சேர்ந்த திரு செல்வம் என்பவரின் மகன் திரு தாஸ் என்பவர் பள்ளி மதில் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், துவக்கப்பள்ளி ஒன்றின் கேட் மீது குடிநீர் லாரி மோதி, பள்ளியின் வளைவு, மதில்சுவர் இடிந்து விழுந்ததில், மேட்டுத் தெருவைச் சேர்ந்த திரு பழனிபிச்சை என்பவரின் மனைவி திருமதி பவானி, அவரது மகள் செல்வி பவித்ரா, திரு கணேசன் என்பவரின் மகள் செல்வி அனுதர்ஷினி ஆகியோர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதில்,
செல்வி பவித்ரா சிகிச்சைக்கு பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட சம்பவங்களில் உயிரிழந்த திருமதி சாந்தி, திரு தாஸ் மற்றும் செல்வி பவித்ரா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுச் சுவர் இடிந்து விழுந்ததில் திருமதி பவானி மற்றும் செல்வி அனுதர்ஷினி ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் வருத்தமடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவருக்கு 50,000/–ரூபாயும், சாதாரண காயமடைந்தவருக்கு 25,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

K. **பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**